

# தவக்காலத் தன்னர்ப்பணங்கள்


**வார்த்தை வழிபாடு பணிக்குழு**

**குழித்துறை மறைமாவட்டம்**

**ஆயர் இல்ல வளாகம்**

**உண்ணாமலைக்கடை - 629 179**

## பெப்ரவரி 17 புதன்

### திருநீற்றுப் புதன்

*"மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தை..."*

*யோவே 2:12-18; 2கொரி 5:20-6:2; மத் 6:1-6, 16-18*

**இன்று நாம்**

**உணவுக் கட்டுப்பாடு, புலால் தவிர்த்தல்,**

**தனியாக-குடும்பமாக தவக்காலத் திட்டமிடல்**

## பெப்ரவரி 18 வியாழன்

*"தன்னலம் துறந்து தம் சிலுவையை*
*நாள்தோறும் தூக்கிக்கொண்டு..."*

*இச 30:15-20; லூக் 9:22-25*

**இன்று நாம்**

**ஒரு ✝ செய்தல்; அதனோடு பேசுதல்,**

**சிலுவை பேசுவதை செவிமடுத்தல்**

## பெப்ரவரி 19 வெள்ளி

### தவக்கால முதல் வெள்ளி

*“அவர்களும் நோன்பு இருப்பார்கள்...”*

*எசா 58:1-9அ; மத் 9:14,15*

**இன்று நாம்**

**ஏதேனும் ஒரு செலவைக் குறைத்து சேமித்தல்.**

**ஒறுத்தல் உணர்வுடன் தனியாக சிலுவைப்பாதை செய்தல்**

## பெப்ரவரி 20 சனி

*“நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை...”*

*எசா 58:9அ-14; லூக் 5:27-32*

**இன்று நாம்**

**படுக்கை நோயாளிகளைச் சந்தித்தல்**

**அவர்தம் இல்லத்தினர்க்கு உறுதியூட்டல்**

***உலக சமூக நீதி தினம்***

## பெப்ரவரி 21 ஞாயிறு

**தவக்கால முதல் ஞாயிறு**

(INVOCABIT SUNDAY - துன்பங்களை உணர அழைக்கும் ஞாயிறு )

*“மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்...”*

*தொநூ 9:8-15; 1பேது 3:18-22; மாற் 1:12-15*

**இன்று நாம்**

**அலைபேசி தவிர்த்தல்**

**ஞானப்பெற்றோரைச் சந்தித்து தவக்காலம் பற்றி கலந்துரையாடல்**

**இயன்றவரை நற்றமிழில் பேசுதல்**

***உலக தாய்மொழி தினம்***

## பெப்ரவரி 22 திங்கள்

*“மானுடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்...”*

*1பேது 5:1-4; மத் 16:13-19*

**இன்று நாம்**

**30 நிமிடங்கள் தனியாக அமர்ந்து தன்னாய்வு செய்தல்**

***திருத்தூதர் பேதுருவின் தலைமைப்பீடம் - விழா***

## பெப்ரவரி 23 செவ்வாய்

*"நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது..."*

*எசா 55:10-11; மத் 6:7-15*

**இன்று நாம்**

**இயேசு கற்பித்த இறைவேண்டலை உளமுணர்ந்து மன்றாடுதல்.**
**அவ்வாறு சொன்னபோது எழுந்த இறையனுபவங்களை எழுதுதல்**

***புனித போலிக்கார்ப்***

## பெப்ரவரி 24 புதன்

*"மானுடமகனும் இத்தலைமுறையினருக்கு அடையாளமாய்..."*

*யோனா 3:1-10; லூக் 11:29-32*

**இன்று நாம்**

**விலங்குகளை அன்பு செய்வதன் அடையாளமாக அவற்றிற்கு ஒரு நற்செயல் செய்தல்**
**கண்டுகொள்ளப்படாத பறவைகள், விலங்குகளுக்கு உணவூட்டல்**

## பெப்ரவரி 25 வியாழன்

*"பிறர் உங்களுக்குச் செய்யவேண்டும் என விரும்புகிறவற்றை.."*

*எஸ் (கி) 4:17k-m, r-t; மத் 7:7-12*

**இன்று நாம்**

**இன்று முழுவதும் இல்லத்தில், சுற்றத்தில், நண்பர்களிடத்தில் கோபப்படாதிருத்தல்**
**வேலை வாய்ப்புத் தேடும் இருவரிடத்திலேனும் உறவாடி நம்பிக்கையூட்டல்**

***உலக வேலையற்றோர் தினம்***

## பெப்ரவரி 26 வெள்ளி

**தவக்கால 2 –ஆம் வெள்ளி**
*"உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென நினைவுற்றால்..."*

*எசே 18:21-28; மத் 5:20-26*

**இன்று நாம்**

**எவரையும் குறை சொல்லாமல், குற்றம் சுமத்தாதிருத்தல்,**
**இல்லத்தினரோடு சிலுவைப் பாதை செய்தல்**

## பெப்ரவரி 27 சனி

*"பகைவரிடமும் அன்புகூருங்கள்..."*

*இச 26:16-19; மத் 5:43-48*

**இன்று நாம்**
**மனத்தாங்கலுடன் இருப்பவரைத் தேடிச் சென்று உறவாடல்**

## பெப்ரவரி 28 ஞாயிறு

**தவக்கால 2 –ஆம் ஞாயிறு**
(REMINISCERE SUNDAY - நினைவூட்டும் ஞாயிறு)

*"என் அன்பார்ந்த மைந்தர் இவரே..."*

*தொ நூ 22:1-2, 9-13, 15-18; உரோ 8:31ஆ -34; மாற் 9:2-10*

**இன்று நாம்**
**நற்கருணை சந்தித்து தன்னாய்வு செய்தல்**

## மார்ச் 01 திங்கள்

*“உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல...”*

*தானி 9:4ஆ-11அ: லூக் 6:36-38*

**இன்று நாம்**

**ஓர் ஏழைக் குடும்பத்தைத் தேடிச் சென்று இயன்ற உதவி செய்தல்**

## மார்ச் 02 செவ்வாய்

*“தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்...”*

*எசா 1:10,16-20: மத் 23:1-12*

**இன்று நாம்**

**எவருக்கு எதிராகத் தவறு இழைத்திருந்தாலும்**
**அவரிடம் சென்று மன்னிப்புக் கோருதல்**

## மார்ச் 03 புதன்

*“தொண்டு ஏற்பதற்கு அல்ல; தொண்டு ஆற்றுவதற்கே...”*

*எரே 18:18-20; மத் 20:17-28*

**இன்று நாம்**

**ஏதேனும் ஒரு காப்பகம் சென்று ஊதியமின்றி சுத்தம் செய்தல்**

## மார்ச் 04 வியாழன்

*“மோசேக்கும் இறைவாக்கினருக்கும் செவிசாய்க்காவிட்டால்...”*

*எரே 17:5-10: லூக் 16:19-31*

**இன்று நாம்**

**தெரு ஓரங்களில் இருப்போரைத் தேடிச் சென்று உதவுதல்**

***புனித கசிமீர்***

## மார்ச் 05 வெள்ளி

### தவக்கால 3 –ஆம் வெள்ளி

*"கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று..."*

*தொநூ 37:3-4, 12-13அ,17ஆ-28அ: மத் 21:33-43,45-46*

**இன்று நாம்**

**இன்று முழுவதும் பணிவான வார்த்தைகள், பணிவானச் செயல்கள் செய்தல்**
**தான் சார்ந்துள்ள சபை / சங்கம் / இயக்கத்தினருடன் சிலுவைப் பாதை செய்தல்**

*உலக இறைவேண்டல் தினம்*

## மார்ச் 06 சனி

*"உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன்..."*

*மீக் 7:14-15, 18-20: லூக் 15:1-3,11-32*

**இன்று நாம்**

**ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கேற்றல்**
**ஒரு போதை நோயாளியையேனும் சந்தித்து புது வாழ்வுக்கு வழிகாட்டல்**

## மார்ச் 07 ஞாயிறு

### தவக்கால 3 –ஆம் ஞாயிறு

(OCULI SUNDAY - கூர்ந்து பார்க்கும் ஞாயிறு)

*“என் தந்தையின் இல்லத்தைச் சந்தை ஆக்காதீர்கள்...”*

*விப 20:1-17: 1கொரி 1:22-25: யோவா 2:13-25*

**இன்று நாம்**

**குடும்மாக ஆலயத் தூய்மை செய்தல்**

## மார்ச் 08 திங்கள்

*“ஒரு கைம்பெண்ணிடமே அனுப்பப்பட்டார்...”*

*2அர 5:1-15: லூக் 4:24-30*

**இன்று நாம்**

**கைம்பெண்நிலையிலுள்ள ஒருவரின் குடும்பத்தைச் சந்தித்து உறவாடி உதவுதல்**

*உலக மகளிர் தினம்*

## மார்ச் 09 செவ்வாய்

*“தம் சகோதர சகோதரிகளை மனதார மன்னிக்காவிட்டால்...”*

*தானி (இ) 1:2, 11-19: மத் 18:21-35*

**இன்று நாம்**

**இன்று முழுவதும் பொறுமையோடும், பொறுப்போடும், பொதுநல உணர்வோடும் செயல்படல்**

## மார்ச் 10 புதன்

*“கடைபிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர்...”*

*இச 4:1,5-9: மத் 5:17-19*

**இன்று நாம்**

**அக்கம் பக்கச் சிறாருடன்அளவளாவி தவக்காலம் பற்றி கலந்துரையாடல்**

## மார்ச் 11 வியாழன்

*"பேச்சற்ற அவர் பேசினார்..."*

*எரே 7:23-28: லூக் 11:14-23*

**இன்று நாம்**
**பேச்சு, கேள்வித் திறனற்ற / மாற்றுத்திறனாளர் ஒருவரையேனும் சந்தித்து அன்பைப் பகிர்தல்**

## மார்ச் 12 வெள்ளி

**தவக்கால 4 –ஆம் வெள்ளி**

*"அடுத்திருப்பவரிடம் அன்பு செலுத்துவது எரிபலிகளைவிட மேலானது..."*

*ஓசே 14:1-9: லூக் 12:28ஆ-34*

**இன்று நாம்**
**ஒரு படுக்கை நோயாளியைச் சந்தித்துப் பணிவிடை செய்தல்**
**14 நலம் நாடுவோர் இல்லங்கள் சென்று சிலுவைப் பாதை செய்தல்**

## மார்ச் 13 சனி

*"கடவுளே, பாவியாகிய என்மீது இரங்கியருளும்..."*

*ஒசே 6:1-: லூக் 18:9-14*

**இன்று நாம்**

**30 நிமிடங்கள் ஒதுக்கி இயற்கைச் சூழலில் தனி செபத்தில் ஆழ்தல்**
**புகை, போதை பழக்கமுடையவர் இன்று முழுவதும் அதைக் கைவிடல்**

***உலக புகைப்பழக்க மறுப்பு தினம்***

## மார்ச் 14 ஞாயிறு

**தவக்கால 4–ஆம் ஞாயிறு**
(LAETARE SUNDAY - மகிழ்ச்சியோடு துன்புற அழைக்கும் ஞாயிறு )

*"நம்பிக்கைக் கொள்வோர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதில்லை..."*

*2குறி 36:14-16, 19-23; எபே 2:4-10; யோவா 3:14-21*

**இன்று நாம்**

**நம்பிக்யையூட்டும் ஒரு நூலின் 4 பக்கங்களையேனும் வாசித்து**
**4 பேருடனாவது கலந்துரையாடல்**

## மார்ச் 15 திங்கள்

*“உம் மகன் பிழைத்துக்கொள்வான்...”*

*எசா 65:17-21; யோவா 4:43-54*

**இன்று நாம்**

**நீண்ட நாட்களாகப் படுக்கையிலும், ICU-விலும் இருப்போர்நலம்பெற நேர்நிலை உணர்வுகளை அனுப்புதல்**

*உலக மாற்றுத்திறனாளர் தினம்*

## மார்ச் 16 செவ்வாய்

*“இனிப் பாவம் செய்யாதீர்...”*

*எசே 47:1-9,12; யோவா 5:1-3அ, 5-16*

**இன்று நாம்**

**இருவரையேனும் ஒப்புரவு அருளடையாளம் பெறத் தூண்டுதல்**

## மார்ச் 17 புதன்

*“தந்தை, தாம் வாழ்வின் ஊற்றாய் இருப்பதுபோல...”*

*எசா 49:8-15; யோவா 5:17-30*

**இன்று நாம்**

**தோட்டம், சுற்றுப்புறச் சுத்தத்தில் கவனம் செலுத்துதல்**

***புனித பேட்ரிக்***

## மார்ச் 18 வியாழன்

*“தந்தை என்னிடம் ஒப்படைத்துள்ள செயல்களே அச்சான்று..”*

*விப 32:7-14; யோவா 5:31-47*

**இன்று நாம்**

**மின் இணைப்பு இல்லா ஓர் இல்லம் சென்று உறவாடல்**
**அவர்களது வாழ்வு மேம்பட வழிகாட்டுதல்**

***எருசலேம் நகர்ப் புனித சிரில்***

## மார்ச் 19 வெள்ளி

**தவக்கால 5 –ஆம் வெள்ளி**

*“அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல்...”*

*2சாமு 7:4-5அ, 12-14அ,16; உரோ 4:13, 16-18, 22; மத் 1:16, 18-21,24*

**இன்று நாம்**
**கருவுற்றிருக்கும் ஒருவரோடு உறவாடி மகிழச் செய்தல்,**
**நேர்மையாக வாழ்பவர் என நாம் கருதுபவரைச் சந்தித்துப் பாராட்டுதல்**
**தன் அன்பியக் குடும்பங்களோடு சிலுவைப் பாதை செய்தல்**

*புனித யோசேப்பு - பெருவிழா*

## மார்ச் 20 சனி

*“வரவேண்டிய இறைவாக்கினர் உண்மையில் இவரே...”*

*எரே 11:18-20; யோவா 7:40-53*

**இன்று நாம்**
**இன்று முழுவதும் உண்மையே பேசுதல்**

*உலக மாற்றுத்திறனாளர் தினம்*

## மார்ச் 21 ஞாயிறு

**தவக்கால 5–ஆம் ஞாயிறு**

(JUDICA SUNDAY – நீதியுணர்வோடு வாழத் தூண்டும் ஞாயிறு )

*“தமக்கென்று வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர்...”*

*எரே 31:31-34; எபி 5:7-9; யோவா 12:20-33*

**இன்று நாம்**

**இத்தவக்கால தன்னுணர்வின் அடையாளமாக**

**ஒரு மரம் நடல் / வாங்கி வழங்குதல்**

***உலக இனப்பாகுபாடு ஒழிப்பு தினம்***

## மார்ச் 22 திங்கள்

*“நானும் தீர்ப்பு அளிக்கவில்லை...”*

*தானி (இ) 2:41இ-62; யோவா 8:1-11*

**இன்று நாம்**

**நண்பர்களோடு / பகுதிவாழ் மக்களோடு இணைந்து**

**நீர் நிலைகளை சுத்தப்படுத்துதல்**

***உலக நீர் தினம்***

## மார்ச் 23 செவ்வாய்

*"அவருக்கு உகந்தவற்றையே எப்போதும் செய்கிறேன்..."*

*எண் 21:4-9; யோவா 8:21-30*

**இன்று நாம்**

**சமூகத்தில் கடைநிலை வாழ்வோரை (புறம்போக்கில்) தேடிச் சென்று**
**உணவு, உடை பகிர்ந்து உறவாடல்**

## மார்ச் 24 புதன்

*"நானாக வரவில்லை; அவரே என்னை அனுப்பினார்..."*

*தானி 3:14-20, 24-25, 28; யோவா 8:31-42*

**இன்று நாம்**

**நீண்ட நாட்களாகத் தொடர்பு கெள்ளாத ஒருவரையேனும்**
**நேரில் சந்தித்தல் / அலைபேசியில் உறவாடல்**

*உலக காச நோய் ஒழிப்பு தினம்*

## மார்ச் 25 வியாழன்

*“உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்...”*

*எசா 7:10-14, 8:10ஆ; எபி 10:4-10; லூக் 1:26-38*

**இன்று நாம்**

**இன்னும் தாய்மைப் பேறு அடையாதவரைச் சந்தித்து நம்பிக்கையூட்டி மன்றாடுதல்**

*ஆண்டவரின் பிறப்பு அறிவிப்பு - பெருவிழா*

## மார்ச் 26 வெள்ளி

**தவக்கால 6-ஆம் வெள்ளி**

*“என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள்...”*

*எரே 20:10-13; யோவா 10:31-42*

**இன்று நாம்**

**திருமுழுக்குப் பெறாமலோ, தயாரிப்பு நிலையிலோ இருப்பவரின் இல்லம் சென்று திருமுழுக்கின் மேன்மையைப் பகிர்தல்**

**தனது மறைக்கல்வி / திருவழிபாடு / திருவிவிலிய / இல்லச் சந்திப்புக் குழுவினருடன் சிலுவைப் பாதை செய்தல்**

## மார்ச் 27 சனி

*“பாலை நிலத்திற்கு அருகிலுள்ள பகுதிக்குப் போனார்...”*

*எசே 37:21-28; யோவா 11:45-57*

**இன்று நாம்**

**ஊருக்கு அருகிலுள்ள மலைக்குன்று / வயல்வெளி / குளக்கரை / கடற்கரை சென்று இயற்கையோடு தன் தவப் பயணத்தை ஆய்வு செய்தல்**

## மார்ச் 28 ஞாயிறு

# புனித வாரம்

**தவக்கால 6–ஆம் ஞாயிறு**

(PALM SUNDAY - குருத்தோலை ஞாயிறு )

*“தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று...”*

*எசா 50:4 - 7; பிலி 2:6 - 11; மாற் 14:1- 15: 47*

**இன்று நாம்**

**குருத்தோலை பவனியில் பங்கேற்றல்**
**வாகனம் தவிர்த்து ஆலயத்திற்கு நடந்து சென்று வருதல்**

## மார்ச் 29 திங்கள்

*"ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கிறார்கள்..."*

*எசா 42:1-7; யோவா 12:1-11*

**இன்று நாம்**

**எவருக்கேனும் எதிராகத் துரோகம் செய்திருந்தால் மன்னிப்புக் கோருதல்**

**மறைமாவட்ட எண்ணெய் மந்திரிப்புத் திருநிகழ்வில் பங்கேற்றல்**

## மார்ச் 30 செவ்வாய்

*"நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன் சேவல் கூவாது..."*

*எசா 49:1-6; யோவா 13:21-33, 36-38*

**இன்று நாம்**

**குடும்பமாக ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கேற்றல்**

**தனிமையில் வாடும் ஓர் இளைஞனை சந்தித்து இறையன்பைப் பகிர்தல்**

## மார்ச் 31 புதன்

*"உம் வீட்டில் பாஸ்கா கொண்டாடப் போகிறேன்..."*

*எசா 50:4-9அ; மத் 26:14-25*

**இன்று நாம்**

**ஓர் ஏழைக் குடும்பத்தை நம் இல்லம் அழைத்து உணவுப் பகிர்தல்**
**குடும்பமாக உயிர்ப்புக் கொண்டாடத் திட்டமிடல்**

## ஏப்ரல் 01 வியாழன்

**ஆண்டவரது இரவு விருந்து**

*"நான் செய்ததுபோல நீங்களும் செய்யுமாறு..."*

*விப 12:1-8, 11-14; 1கொரி 11:23-26;யோவா 13:1-15*

**இன்று நாம்**
**ஓர் அருள்பணியாளரையேனும்சந்தித்து குருத்துவ வாழ்த்து அளித்தல்**
**ஒவ்வொருவரும் தங்கள் இல்லத்தில் வாழ்வோரின் காலடிகளைக் கழுவுதல்**
**திருச்சடங்கில் பங்கேற்று ஏழையருக்கான காணிக்கைப் பகிர்தல்**

## ஏப்ரல் 02 வெள்ளி

**ஆண்டவரது பாடுகளின் வெள்ளி**

*“அவர் தம் உயிரைக் குற்ற நீக்கப் பலியாகத் தந்தார்...”*

*எசா 52:13-53, 12; எபி 4:14-16, 5:7-9; யோவா 18:1-19:42*

**இன்று நாம்**

**இயேசுவின் பாடுகளோடு ஏழையரின் வாழ்வு நிலையை ஆழமாகத் தியானித்தல்**

**இரத்த தானம் செய்தல் / ஒரு வாரத்திற்குள் செயற்படுத்தல்**

**உடல் தானம் செய்யத் திட்டமிடல்**

**பங்களவில் நிகழும் சிலுவைப் பாதையில் பங்கேற்றல்**

## ஏப்ரல் 03 சனி

**புனித சனி**

*“கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள்...”*

*தொநூ 1:1-2:2; தொநூ 22:1-18; விப 14:15-15:1; எசா 54:5-14; எசா 55:1-11; பாரூ 3:9-15, 32-4:4; எசே 36:16-17அ, 18:28; உரோ 6:3-11; மாற் 16:1-7*

**இன்று நாம்**

**நிலைவாழ்வு பெற்றவர்களின் கல்லறைகளைச் சந்தித்து மன்றாடுதல்**

## ஏப்ரல் 04 ஞாயிறு

(EASTER SUNDAY - உயிர்ப்பின் ஞாயிறு)

*"இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும்..."*

*திப 10:34அ, 37-43; கொலோ 3:1-4; யோவா 20:1-9*

**இன்று நாம்**
**உயிர்ப்பின் ஒளியில்**
**நம் குடும்பம் - சமூக, இயற்கை, இறைவனோடுள்ள**
**உறவு வாழ்வின் புதிய அணுகுமுறைகளை**
**எழுதி இல்லத்தில் தொங்கவிடல்**



**குழித்துறை மறைமாவட்ட**

**வார்த்தை வழிபாடு பணிக்குழுவின்**

**பாசங்கலந்த உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்.**